**செய்தி வெளியீடு எண் :400** **நாள்: 14.03.2022**

**<u>'தமிழ்நாட்டில் தேனி மாவட்டம், பொட்டிபுரம் கிராமத்தில், இந்திய நியூட்ரினோ ஆய்வகம் (INO) அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும்' - என வலியுறுத்தி மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கடிதம்</u>**

தமிழ்நாட்டில் தேனி மாவட்டம், பொட்டிபுரம் கிராமத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்திய நியூட்ரினோ ஆய்வகம் (INO) அமைக்கும் திட்டத்தைக் கைவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கிடுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (14-3-2022) கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டின் தேனி மாவட்டம், பொட்டிபுரம் கிராமத்தில் இந்திய நியூட்ரினோ ஆய்வகம் (I.N.O.) அமைக்கும் திட்டத்தை கைவிடுவது தொடர்பாக, 17-6-2021 நாளன்று ஒன்றிய அரசுக்கு தான் வைத்த கோரிக்கையை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனது கோரிக்கை, வனவிலங்குகள் மற்றும் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாத்திடவும், சுற்றுச்சூழல் அமைப்புக்கு மீள சரிசெய்ய இயலாத சேதத்தை ஏற்படுத்தும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நியூட்ரினோ திட்டத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள இடம், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ள மதிகெட்டான்-பெரியார் புலிகள் வழித்தட எல்லைக்குள் வருகிறது என்றும், நியூட்ரினோ ஆய்வகத் திட்ட நடவடிக்கைகள்,

இப்பகுதியிலுள்ள வன உயிரினங்களின் மரபணு வளர்ச்சியைப் பாதிக்கும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) 27.11.2017 அன்று, சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கான முன்மொழிவை பரிசீலிக்கும் போது கீழ்க்காணும் இரண்டு முக்கிய விஷயங்களை சுட்டிகாட்டியுள்ளது:

1. இத்திட்டத்திற்காக சுரங்கம் தோண்டப்படும்போது அதிக அளவிலான கடின பாறைகளை உடைப்பதற்காக வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் சுரங்கம் தோண்டும் போது 6,00,000 கன மீட்டர் அளவிலான சர்னோகைட் பாறைகள் உடைக்கப்பட்டு மலையிலிருந்து மண் வெளியேற்றப்பட வேண்டும்.

2. மலை உச்சியிலிருந்து 1000 மீட்டர் ஆழத்தில் சுரங்கப்பாதை அமைக்கப்படும் போது மலைப்பாறை மிகப் பெரிய அழுத்தத்திற்கு உள்ளாக்கப்படும். மேலும், பாறையின் செங்குத்து அழுத்தம் ஒரு சதுர மீட்டருக்கு 270 கிலோவிற்கும் அதிகமாக இருக்கும். இதனால் பாறை வெடிப்பு மற்றும் கூரை சரிவுகள் ஏற்பட வழிவகுத்திடும். இத்திட்டத்தினை பாதுகாப்பாக செயல்படுத்த புவியியல் தொழில்நுட்ப ஆய்வுகளைப் பயன்படுத்தி முன்மொழிவுகள் ஆராயப்பட வேண்டும்.

எனவே தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) இந்த விவரங்களை வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்குத் தெரிவித்தது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். நியூட்ரினோ ஆய்வகத்தினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதி, மதிகெட்டான் சோல தேசிய பூங்காவிலிருந்து 4.9 கி.மீ. தொலைவிலும், தென் மேற்கு தொடர்ச்சி மலையான போடி மலை காப்பு காட்டுப் பகுதிக்குள் அமைந்துள்ளது, மேற்கு தொடர்ச்சி மலை உலகளாவிய பல்லுயிர் மையமாகவும்,

உள்ளூர் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் மையமாகவும் விளங்குகிறது எனத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் இவ்விடத்திற்கு கிழக்குப் பகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மேகமலை புலிகள் காப்பகத்துடன் தொடர்புடையதாக உள்ளது என்றும், இங்கு புலிகளுடன் ஏனைய விலங்குகள், பறவைகள், ஊர்வன மற்றும் பாலூட்டிகள் வசித்து வருகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இப்பகுதி முக்கிய நீர்ப்பிடிப்பு பகுதிகளான சம்பை, கொட்டகொடி பகுதிகளை உள்ளடக்கியதாகவும், போடி மலைப்பகுதியில் உள்ள சிறிய ஓடைகள் கொட்டக்குடி ஆற்றில் இணைக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார். இது வைகை அணையில் கலக்கும் முன் பெரியாற்றில் கலக்கிறது என்றும் தமிழ்நாட்டின் ஐந்து மாவட்டங்களுக்கு குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கான தண்ணீர் வழங்குவதுடன் மக்களின் வாழ்வதாரத்துக்கு அடிப்படையாக இந்த நீர்பிடிப்பு பகுதி உள்ளது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 27-9-2021 அன்று தமிழ்நாட்டிலிருந்து அமைச்சர்கள் குழு ஒன்று, மாண்புமிகு ஒன்றிய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அவர்களை சந்தித்து, இந்தத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய கடுமையான பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, இந்திய நியூட்ரினோ ஆய்வகம் அமைக்கும் திட்டத்தினைக் கைவிட கேட்டுக் கொண்டதாக குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு, தமிழ்நாட்டில் நியூட்ரினோ ஆய்வகம் அமைப்பதைக் கைவிட, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு தாம் மீண்டும் கேட்டுக் கொள்வதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*****

**P.R.No: 400** **Date: 14.03.2022**

**<u>Text of D.O.Letter dated 14.3.2022 of Hon’ble Chief Minister of Tamil Nadu to Hon’ble Prime Minister of India Thiru.Narendra Modi request to intervene and advise the authorities concerned to drop the Neutrino Observatory (INO) Project in Tamil Nadu.</u>**

I would like to invite your attention to the memorandum dated 17.06.2021, in which I had made a specific request to the Government of India to drop the proposal of setting up the India Based Neutrino Observatory (INO) at Pottipuram village in Theni District of Tamil Nadu. This request was made in the larger interest of conservation of the rich wildlife and biodiversity of the region, as the project would cause irreversible damage to the fragile and sensitive eco system.

It is pertinent to note that the site which is being proposed for the Neutrino project falls within the Mathikettan – Periyar Tiger Corridor as mapped by the National Tiger Conservation Authority (NTCA). The Corridor has the critical function of maintaining the genetic flow, which will be destroyed due to project activities.

The State Environmental Impact Assessment Authority (SEIAA), Tamil Nadu, on 27.11.2017 pointed out the following while processing the proposal for granting Environmental Clearance to the project proponent:

1. *The tunnelling work involves carrying out blasting in the hard and composite rock mass and requires a huge quantity of high strength explosives to break it. Further, the tunnelling work involves the excavation of 600000 cubic metres of Charnockite rock from the mountain.*

*2. The tunnel and cavern will be at a depth of 1,000 m from the top of the mountain. At the depth of 1,000 m, mountain rock would be under tremendous pressure and the vertical stress is expected to be greater than 270 kg per sq.m. This will create problems like rock bust and roof collapse. The proposals will have to be scrutinized using Geotechnical studies for safeguards.*

Therefore, the SEIAA referred the matter to the Ministry of Environment, Forest and Climate Change. The proposed project is located about 4.9 km from Mathikettan Shola National Park. The project site also falls within the Bodi Hills West Reserve Forest, which lies in the Southern Western Ghats. The Western Ghats is considered as a global biodiversity hotspot harbouring numerous endemic species of flora and fauna. This area also links ecologically to the eastern habitats where Srivilliputhur Meghamalai Tiger Reserve is located and hosts tigers from the region and assists in genetic dispersal across the Western Ghats and their South-Eastern projections through the Cumbam Valley. Along with tigers, its co-predators, several other species of mammals including the ungulates, reptiles and amphibians move around the slopes of these hills.

The area also forms a significant watershed and water catchment for River Sambal and River Kottakudi. Small streams on the west side of Bodi hills join the Kottakudi river which joins the Periyar river before draining into the Vaigai dam. This watershed is the lifeline of the local communities as it supports their livelihood and provides water for drinking and agricultural needs for five districts of Tamil Nadu.

I further wish to add that a Ministerial delegation from the State had met Thiru. Piyush Goyal, Hon'ble Union Minister for Industries & Commerce, on 27.09.2021 in this regard. They had conveyed our specific stand and had

requested to drop the project considering the serious repercussions that can be caused by the project.

Therefore, I once again request you to kindly intervene in this matter and advise the authorities concerned to drop the Neutrino Observatory (INO) Project in Tamil Nadu.

**Issued By: - DIPR, Secretariat, Chennai - 9.**